ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ திருக்குறுந்தாண்டகம் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ திருக்குறுந்தாண்டகம் ॥

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்
மாலைக் கண்டு கொண்டேன் இனி விடுகிலேன்

‡நிதியினைப் பவளத் தூணை⋆ நெறிமையால் நினைய வல்லார்⋆
கதியினைக் கஞ்சன் மாளக்⋆ கண்டு முன் அண்டம் ஆளும்⋆
மதியினை மாலை வாழ்த்தி⋆ வணங்கி என் மனத்து வந்த⋆
விதியினைக் கண்டு கொண்ட⋆ தொண்டனேன் விடுகிலேனே (1)

காற்றினைப் புனலைத் தீயைக்⋆ கடி மதிள் இலங்கை செற்ற
ஏற்றினை⋆ இமயம் மேய⋆ எழில் மணித் திரளை⋆ இன்ப
ஆற்றினை அமுதந் தன்னை⋆ அவுணன் ஆர் உயிரை உண்ட
கூற்றினை⋆ குணங்கொண்டுள்ளம்⋆ கூறு நீ கூறுமாறே (2)

பாயிரும் பரவை தன்னுள்⋆ பரு வரை திரித்து⋆ வானோர்க்-
காயிருந்தமுதம் கொண்ட⋆ அப்பனை எம் பிரானை⋆
வேயிருஞ்சோலை சூழ்ந்து⋆ விரி கதிர் இரிய நின்ற⋆
மாயிருஞ்சோலை மேய⋆ மைந்தனை வணங்கினேனே (3)

கேட்க யான் உற்றதுண்டு⋆ கேழலாய் உலகம் கொண்ட⋆
பூக் கெழு வண்ணனாரைப்⋆ போதரக் கனவில் கண்டு⋆
வாக்கினால் கருமம் தன்னால்⋆ மனத்தினால் சிரத்தை தன்னால்⋆
வேட்கை மீதூர வாங்கி⋆ விழுங்கினேற்கினியவாறே (4)

இரும்பனன்றுண்ட நீர் போல்⋆ எம் பெருமானுக்கு⋆ எந்தன்
அரும் பெறல் அன்பு புக்கிட்டு⋆ அடிமை பூண்டுய்ந்து போனேன்⋆
வரும் புயல் வண்ணனாரை⋆ மருவி என் மனத்து வைத்து⋆
கரும்பின் இன் சாறு போலப்⋆ பருகினேற்கினியவாறே (5)

மூவரில் முதல்வன் ஆய⋆ ஒருவனை உலகம் கொண்ட⋆
கோவினைக் குடந்தை மேய⋆ குரு மணித் திரளை⋆ இன்பப்

www.prapatti.com

பாவினைப் பச்சைத் தேனைப்⋆ பைம் பொன்னை அமரர் சென்னிப்
பூவினை⋆ புகழும் தொண்டர்⋆ என் சொல்லிப் புகழ்வர் தாமே (6)

இம்மையை மறுமை தன்னை⋆ எமக்கு வீடாகி நின்ற⋆
மெய்ம்மையை விரிந்த சோலை⋆ வியன் திருவரங்கம் மேய⋆
செம்மையைக் கருமை தன்னைத்⋆ திருமலை ஒருமையானை⋆
தன்மையை நினைவார் என்தன்⋆ தலைமிசை மன்னுவாரே (7)

வானிடைப் புயலை மாலை⋆ வரையிடைப் பிரசம் ஈன்ற⋆
தேனிடைக் கரும்பின் சாற்றைத்⋆ திருவினை மருவி வாழார்⋆
மானிடப் பிறவி அந்தோ!⋆ மதிக்கிலர் கொள்க⋆ தந் தம்⋆
ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்கு⋆ உறுதியே வேண்டினாரே (8)

உள்ளமோ ஒன்றினில்லாது⋆ ஓசையில் எரி நின்றுண்ணும்⋆
கொள்ளிமேல் எறும்பு போலக்⋆ குழையுமால் என்தன் உள்ளம்⋆
தெள்ளியீர்! தேவர்க்கெல்லாம்⋆ தேவராய் உலகம் கொண்ட⋆
ஒள்ளியீர் உம்மை அல்லால்⋆ எழுமையும் துணை இலோமே (9)

சித்தமும் செவ்வை நில்லாது⋆ என் செய்கேன் தீவினையேன்⋆
பத்திமைக்கன்புடையேன் ஆவதே⋆ பணியாய் எந்தாய்⋆
முத்தொளி மரகதமே!⋆ முழங்கொளி முகில் வண்ணா⋆ என்
அத்த! நின் அடிமை அல்லால்⋆ யாதும் ஒன்றறிகிலேனே (10)

தொண்டெல்லாம் பரவி நின்னைத்⋆ தொழுதடி பணியுமாறு
கண்டு⋆ தான் கவலை தீர்ப்பான் ஆவதே⋆ பணியா எந்தாய்⋆
அண்டமாய் எண் திசைக்கும்⋆ ஆதியாய் நீதி ஆன⋆
பண்டமாம் பரம சோதி!⋆ நின்னையே பரவுவேனே (11)

ஆவியை அரங்க மாலை⋆ அழுக் குடம்பெச்சில் வாயால்⋆
தூய்மை இல் தொண்டனேன் நான்⋆ சொல்லினேன் தொல்லை
நாமம்⋆
பாவியேன் பிழைத்தவாறென்று⋆ அஞ்சினேற்கஞ்சல் என்று⋆
காவி போல் வண்ணர் வந்து⋆ என் கண்ணுளே தோன்றினாரே (12)

www.prapatti.com

இரும்பனன்றுண்ட நீரும்⋆ போதரும் கொள்க⋆ என்தன்
அரும்பிணி பாவம் எல்லாம்⋆ அகன்றன என்னை விட்டு⋆
சுரும்பமர் சோலை சூழ்ந்த⋆ அரங்க மா கோயில் கொண்ட⋆
கரும்பினைக் கண்டு கொண்டு⋆ என் கண் இணை களிக்குமாறே (13)

காவியை வென்ற கண்ணார்⋆ கலவியே கருதி⋆ நாளும்
பாவியேன் ஆக எண்ணி⋆ அதனுள்ளே பழுத்தொழிந்தேன்⋆
தூவி சேர் அன்னம் மன்னும்⋆ சூழ் புனல் குடந்தை யானை⋆
பாவியேன் பாவியாது⋆ பாவியேன் ஆயினேனே! (14)

முன் பொலா இராவணன் தன்⋆ முது மதிள் இலங்கை வேவித்து⋆
அன்பினால் அனுமன் வந்து⋆ ஆங்கடி இணை பணிய நின்றார்க்கு⋆
என்பெலாம் உருகி உக்கிட்டு⋆ என்னுடை நெஞ்சம் என்னும்⋆
அன்பினால் ஞானநீர் கொண்டு⋆ ஆட்டுவன் அடியனேனே (15)

மாய மான் மாயச் செற்று⋆ மருதிற நடந்து⋆ வையம்
தாயமா பரவை பொங்கத்⋆ தட வரை திரித்து⋆ வானோர்-
க்கீயுமால் எம் பிரானார்க்கு⋆ என்னுடைச் சொற்கள் என்னும்⋆
தூயமா மாலை கொண்டு⋆ சூட்டுவன் தொண்டனேனே (16)

பேசினார் பிறவி நீத்தார்⋆ பேருளான் பெருமை பேசி⋆
ஏசினார் உய்ந்து போனார்⋆ என்பதிவ் உலகின் வண்ணம்⋆
பேசினேன் ஏச மாட்டேன்⋆ பேதையேன் பிறவி நீத்தற்கு⋆
ஆசையோ பெரிது கொள்க⋆ அலை கடல் வண்ணர் பாலே (17)

இளைப்பினை இயக்கம் நீக்கி⋆ இருந்துமுன் இமையைக் கூட்டி⋆
அளப்பில் ஐம்புலன் அடக்கி⋆ அன்பவர் கண்ணே வைத்து⋆
துளக்கமில் சிந்தை செய்து⋆ தோன்றலும் சுடர்விட்டு⋆ ஆங்கே
விளக்கினை விதியின் காண்பார்⋆ மெய்ம்மையை காண்கிற்பாரே (18)

‡பிண்டியார் மண்டை ஏந்திப்⋆ பிறர் மனை திரிதந்துண்ணும்
உண்டியான்⋆ சாபம் தீர்த்த ஒருவன் ஊர்⋆ உலக மேத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம்⋆ கச்சி பேர் மல்லை என்று
மண்டினார்⋆ உய்யல் அல்லால்⋆ மற்றை ஆர்க்குய்யல் ஆமே (19)

‡வானவர் தங்கள் கோனும்⋆ மலர்மிசை அயனும்⋆ நாளும்
தேமலர் தூவி ஏத்தும்⋆ சேவடிச் செங்கண் மாலை⋆
மான வேல் கலியன் சொன்ன⋆ வண் தமிழ் மாலை நாலைந்தும்⋆
ஊனம் அதின்றி வல்லார்⋆ ஒளி விசும்பாள்வர் தாமே (20)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com